ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பணிப்பாளர் பதவி/பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் (ஒப்பந்த அடிப்படையில்)

## 1.0 வேலை/பொறுப்புக்கள்:

இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 01இல் நவீன வசதிகளுடன் கூடிய பாரிய அலுவலகக் கட்டிடத்தொகுதியையும், இராஜகிரியவில் பயிற்சி மையமொன்றினையும் 06 பிரதேச அலுவலகங்களையும் மற்றும் ஒரு சில பணிமனைகளையும் தொழிற்படுத்திவருகின்றது. வங்கியில் ஆளணியினர், நாணயம், சாதனங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பனவற்றினை பாதுகாப்பதற்கான நவீனத்துவம் வாய்ந்ததும் விசேடத்துவமிக்கதுமான முறைகளுடன் மிகச்சிறந்த கருவிகள் பொருத்தப்பட்டிருக்கிறது.

பணிப்பாளர்/பாதுகாப்பு சேவைகள் வங்கியின் அனைத்து பாதுகாப்பு ஒழுங்குகளுக்கும் பொறுப்பாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற உதவி ஆளுநரின் ஊடாக மூத்த முகாமைத்துவத்திற்கு அறிக்கையளித்தலும் வேண்டும். பணிப்பாளர்/ பாதுகாப்புச் சேவைகள் பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாக இருப்பார்.

- பல்வேறு பணிமனைகளிலும் அயலிலுள்ள சுற்றாடலிலும் மத்திய வங்கியின் பாதுகாப்பு ஒழுங்குகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தலுக்கும்,
- அனைத்து பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பிலும் விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும் என்பதுடன் காத்திரமான எதிர்ப்பு வழிமுறைகளின் மீது வங்கி முகாமைத்துவத்திற்கு மதியுரைகளையும் வழங்குவதற்கும் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஒழிப்பதற்கும் எதிர் நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும்,
- பாதுகாப்பு கட்டுப்பாட்டு அறைகளிலுள்ள நவீனத்துவமிக்க இலத்திரனியல் சாதனங்களையும் தீயணைப்பு பாதுகாப்பு சாதனங்களையும் கையாளுவதற்கும்,
- மத்திய வங்கியின் பாதுகாப்பு அலுவலர்களுக்கு, முக்கியமாக, புலனாய்வுகளை ஒன்றுதிரட்டல், ரோந்து நடவடிக்கைகள், நிலையான பாதுகாப்பு கடமைகள், சுடுபடைக் கலம்களை பயன்படுத்தல், உலோகங்கள் மற்றும் வெடிபொருள் கருவிகள், பொதிகளுக்கான எக்ஸ்-ஊடுகதிர் கருவிகள் மற்றும் அஞ்சல்களை ஸ்கான் பண்ணும் சாதனங்கள் மற்றும் ஊர்திகள், ஆட்கள், கடிதங்கள், பொதிகள் மற்றும் வெடிபொருள் மற்றும் குற்றங்களுக்குரிய விடயங்கள் என்பனவற்றை பரிசோதிப்பதில் பயிற்சி அளிப்பதற்கும்.
- முகாமைத்துவத்தினால் ஒப்படைக்கப்பட்ட மத்திய வங்கியின் பாதுகாப்புடன் தொடர்பான வேறு ஏதேனும் கடமைகளுக்கும்.

பணிப்பாளர்/ பாதுகாப்பு சேவைகள் சுறுசுறுப்பானவராகவும் தெளிவாகப் பேசக்கூடியவராகவும் இயக்கவாற்றல் மிக்க ஆளாகவும் ஆயுதப்படைகள், பொலிஸ் மற்றும் ஏனைய புலனாய்வு முகவர்களின் உயர்மட்டத்திலுள்ள மூத்த ஆளணியினருடன் அதேபோன்று அதிகாரத்திலுள்ள நபர்களுடன் இலகுவாக இணைப்புக்களை ஏற்படுத்தக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். அவர் சிறந்த தலைமைத்துவத்தையும் பாதுகாப்பு ஆளணியினரை கொண்ட பாரிய குழுமத்தினரை வழிநடத்தக்கூடியவராகவும் கட்டுப்படுத்தக்கூடியவராகவும் அவர்களின் கௌரவத்தினை பெற்றுக்கொள்ளக்கூடியவராகவும் இருக்க வேண்டிய அதேவேளையில் கடுமையான ஒழுங்குகளைப் பேணக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடி மிகச்சிறந்த மனிதஉறவுகளைப் பேணுவராகவும் தொடர்பூட்டல் தேர்ச்சிகளைப் கொண்டவராகவும் பணியின் தேவைகளுக்கேற்ப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆயுதப்படைகள், அரசத் திணைக்களங்கள், அமைச்சுக்கள் அதேபோன்று நிதியியல் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர்/ பாதுகாப்பு சேவைகளின் பணிகள் வார இறுதி, விடுமுறை என்பனவற்றைக் கருத்திற் கொள்ளாது, 24 மணித்தியாலமும் தொடர்ச்சியான அடிப்படையில் இருத்தல் வேண்டும். ஆகவே அவரின் வாசஸ்தலம் இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்திலிருந்து குறுகிய தூரத்தில் கொழும்பில் அல்லது அதனை அண்டிய பிரதேசத்தில் இருத்தல் வேண்டும்.

## 2.0 தேவைப்படும் குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் அனுபவம்:

பொருத்தமான தேர்வுநாடி குறைந்தபட்சம் இலங்கை இராணுவத்தின் கிரமமான பணியிலிருந்து ஓய்வுபெற்ற **மேஜர் ஜெனரலாக**, கடற்படையின் **றியர் அட்மிரலாக** அல்லது விமானப்படையில் **எயார் வைஸ் மார்சலாக** இருந்திருக்க வேண்டுமென்பதுடன், பாதுகாப்புடன் தொடர்பான விடயங்களில் நீண்ட காத்திரமான பயிற்சியையும் அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

சிவில் சமூகத்தில் பாதுகாப்பு சேவைகளை முகாமைசெய்வதில் பணி ஓய்வுகாலத்திற்கு பின்னரான அனுபவம் மேலதிக நன்மையாகக் கருதப்படும்

## 3.0 வயது:

2025.02.28 ஆம் திகதி அன்று 58 வயதிற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

## 4.0 தொழில் நிலை:

ஒப்பந்த அடிப்படையில் **ஆரம்பத்தில்** 1 ஆண்டாக இருக்கும். திருப்திகரமான செயலாற்றம் நிரூபிக்கப்படுமிடத்து தொழில் ஒப்பந்தம் நீடிக்கப்படலாம் அல்லது வங்கியின் தற்றுணிபின்படி முடிவுறுத்தப்படலாம்.

## 5.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:

அனைத்தையுமுள்ளடக்கிய நிலையான மாதாந்த ஊதியம் மற்றும் ஊ.சே.நிதியம், ஊ.ந.நிதியம் என்பனவற்றை பேசித் தீர்மானிக்கலாம்.

## தெரிவுசெய்யப்படும் முறை

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நேர்முகப் பரீட்சைகள்

## விண்ணப்பங்கள்:

விண்ணப்பப் படிவங்களை இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2025.02.28. அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பணிப்பாளர்/ பாதுகாப்புச் சேவைகள் (ஒப்பந்த அடிப்படையில்) இற்கான விண்ணப்பம்"** என்ற சொற்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டார். தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் நடத்தப்படும் சான்றிதழ் சரிபார்ப்பின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திகள் எக்காரணத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்.

நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பதற்கான அல்லது ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.


**பணிப்பாளர் – மனித வளங்கள்**
**இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.**
**தொலைபேசி : 011-2477330 தொலைநகல் : 011-2477715**